# தினக்கதிர் செய்திக்கு மறுப்பு

... 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கடும் நீர்ப்பளுவைத்தாங்க முடியாது இப்பகுதித் தமிழர் பலர் மேற்படி முஸ்லிம் அதிகாரிகளுக்குத் தம் பாரம்பரியக் காணிகளை விற்கலாயினர். இவ்வாறு காரியப்பர் குடும்பம் போன்ற முஸ்லிம் பெருநில உடமையாளர்கள் அங்கு உருவாகினர்............

– 'தர்மன்'

............ மீனாட்சியின் மகன்மாரிமுத்து - ஒரு தேவையின் பொருட்டுத் தன் நிலத்தை விற்கின்றான்; சீதாதேவியின் மகள் ஸீனத்தும்மாவினுடைய புத்திரன் சீனிமுஹம்மது அதனை வாங்குகிறான். இதிலென்னையா தப்பிருக்கிறது? மாமன் விற்க, மருமகன் வாங்கியதுதானே! வேறோர் இனத்தினன் அபகரிக்கவில்லையே! அத்துடன், மாமனின் தேவையை உணர்ந்து மருமகன் செய்த உதவியாகவே இதனைக் கொள்ளல் வேண்டும். .........- **ஹாஜீ உஸ்மான் சாஹிப்**

வெளியீடு:

ஹொலிபீல்ட் - கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

'**தமிழர் ஆண்ட தீவின் கிழக்குப் பகுதியில்**
**50 ஆண்டுகளாகத் தமிழர் அழிக்கப்படும் அநியாயம்**'
என்னும் தலைப்பில் 18-11-2000 சனிக்கிழமை
**தினக்கதிர்** பத்திரிகையில், *"தர்மன்"* என்பார்
எழுதிய கட்டுரைக்கு மறுப்பாக -
பிரபல "த.ஃ.வா" எழுத்தாளர் - பந்நூலாசிரியர் -
தாரிகே மில்லத், ஹாஜி உஸ்மான் ஸாஹிப் அவர்களால்
எழுதப்பட்ட -
"**விஷத்தைக் கக்கலாகாது; இனத்தைப் பிரித்தல் கூடாது**"
என்ற தலைப்பிலான கட்டுரை.
***"முக்குகர் குல மன்னன் மணிவண்ணனின் வாரிசுகளே***
***இப்பிரதேச முஸ்லிம்கள்"***
என்னும் மகுடத்தில் 25-11-2000ம் அன்று,
அப்பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது.

இருதரப்பு வாதங்களையும் புத்திஜீவிகளின் பார்வைக்காக
இங்கு தருகின்றோம்.
படித்து - உணர்ந்து - விஷயத்தைப் புரிந்து -
சமய நல்லிணக்கம் காத்து - சமயப்பொறை பேணி
தமிழ் - முஸ்லிம் வகுத்துவார் - சகோதரத்துவம் இறுக்கமாகி -
இனிய தமிழின் உயர்வுக்குப் பாடுபடுவோமாக!

அன்புடன்
*எம்.முஹம்மது ஜெஸ்மின்* J.P.
**தேசியத் தலைவர்,**
**ஹொலிபீல்ட் - கல்முனை.**

ஹிஜ்ரி 1421 ரமழான் 04 ஈஸவி 2000- டிசம்பர் 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திக்கு மறுப்பு

ஆசிரியர்,
தினக்கதிர்,
மட்டக்களப்பு.

20-11-2000

அன்புள்ள ஐயா! அநேக வணக்கங்கள்!

# விஷத்தைக் கக்கலாகாது; இனத்தைப் பிரித்தல் கூடாது

தங்களுடைய 18-11-2000 - சனிக்கிழமை பத்திரிகையில் ''தமிழர் ஆண்ட தீவின் கிழக்குப் பகுதியில் ஐம்பது ஆண்டுகளாகத் தமிழர்கள் அழிக்கப்படும் அநியாயம்'' என்னும் தலைப்பில், ''தர்மன்'' என்பவரால் எழுதப்பட்ட விசயங்களைப் படித்தேன்.

அதில் முஸ்லிம்களைச் சம்பந்தப்படுத்தியும், முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றின் தோற்றம் பற்றியும் அவர் எழுதியிருக்கும் பாங்கு விசமத்தைக் கக்குவது போலவும், இனத்தைப் பிரிப்பது போலவும் தென்படுகின்றது.

அதனையிட்டு எமது ஆட்சேபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தினக்கதிர் எமது பிரதேசத்தின் பத்திரிகை - நாளேடுஎன்பதில் முஸ்லிம்கள் பெரிதும் புளகாங்கிதம் அடைந்தனர்; வாங்கிப் படிக்கவும் ஆர்வம் கொண்டனர்; என்போன்ற சிலர் அதில் எழுத வேண்டுமென்ற உணர்வினால் உந்தப்பட்டதுவுமுண்டு!

ஆனால், ஆரம்பத்திலேயே இனக்கசப்புக்களை உருவாக்கும் விதத்தில் - பழைய சம்பவங்களுக்குப் புதுமெருகூட்டி - உண்மை ஒருவாறு இருக்க - நடந்த சம்பவங்களை வேறு திசையில் திருப்ப எத்தனிப்பது விவேகமான செயலல்ல; விபரீதங்களையே விளைவிக்கும்!

வளரவேண்டிய - வாழவேண்டிய ஒருநாளிதழ், தமிழ்-முஸ்லிம் வேற்றுமையை உண்டுபண்ணி, எமது கிழக்குப் பிரதேசத்தை ஒரு குழப்பநிலைக்கு உள்ளாக்கும் விதமாக ஆக்கங்களைப் பிரசுரிப்பதன் மூலம் தனது வளர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயலக் கூடாது.

கட்டுரை எழுதுபவர்கள் எப்படியும் எழுதலாம்; எனினும் அதனுடைய யதார்த்த நிலையைப் புரிந்து - ஆய்ந்து - திருத்திப் பிரசுரிக்க வேண்டியது ஆசிரியரது பொறுப்பாகும்!

எனவே, சில விசயங்களை உங்களது கவனத்திற்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவருவதோடு இவ்விபரத்தை உரிய முறையில் பிரசுரிப்பீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

மொத்தத்தில் சொல்வதானால் முஸ்லிம்கள் பற்றிக் கட்டுரையாளர் தெரிவித்துள்ள விசயங்கள் யாவும் உண்மைக்குப் புறம்பானவையாகும்!

மட்டக்களப்பு மாநிலத்தின் (அம்பாரை உட்பட) முஸ்லிம்கள் யார்? தமிழர்கள் யார்? இவர்கள் ஈரினத்தினரா? அப்படி ஈரினம் என்று நினைத்தால் அது பெரும் மதியீனமாகும்! அதனை உரிய முறையில் தமிழ் எழுத்தாளர்கள் புரிந்துகொள்வது அவசியமானதாகும்.

முஸ்லிமான எந்தப் பெண்ணும் ஆரம்பத்தில் - வெளிநாட்டிலிருந்து இப்பிரதேசத்துக்கு வரவில்லை; மாறாக, சில ஆண்கள் மட்டுமே வந்தார்கள். அதிலும் குறிப்பாக - தமிழர் தாயகம் என்று சொல்லப்படுகின்ற இந்தியாவிலிருந்து வந்த பட்டாணியர்கள் பெரும்பாலோர்.

இன்றைக்கும் கூட, பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மன் கோயில் திருவிழாவின் போது (தீப்பள்ளயம்) விஷேசமாகப் "பட்டாணி மடை" போடப்படுவது அதற்கோர் ஆதாரமாகும்.

அப்படி வந்த ஆண்கள்தான், தமிழ்ப் பெண்களை மணந்து வாழலாயினர்; அரசனின் உத்தரவுப்படி!

அக்காலத்தில் மட்டக்களப்பு மாநிலத்தை ஆட்சிபுரிந்த முக்குகர் குல மன்னன் (மணிவண்ணன் என்றும் சொல்லப்படு வதுண்டு) தன் குலக்குடிகளான -

மாந்தரா குடி,
பணிக்கனா குடி,
பொன்னாட்சி குடி,
காமராஜர் குடி,
படையாண்ட குடி,
வெள்ளரசன் குடி,
உத்துப்பிள்ளை குடி,
கச்சனா குடி,
ராசாம்பிள்ளை குடி
ஓடாவி குடி,
வடக்கனா குடி,
மூத்தநாச்சி குடி,
அம்மனாச்சி குடி,
ஆலம் குடி,
உலகிப்போடி குடி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மானட்டி குடி,
வட்டுநாச்சி குடி,
மாமனாப்போடி குடி,

முதலான பல்வேறு குடிப்பிரிவுகளிலிருந்தும் பெண் கொடுத்துத் தமிழுடன் இஸ்லாம் இணைந்திட இடமளித்தார் அம்மன்னர். ஆக, இன்றைய இப்பிரதேச முஸ்லிம்கள் அம்மன்னனின் வாரிசுகள்; இம்மண்ணை ஆண்ட இனம்!

கிழக்கிலங்கைக்கு ''இஸ்லாம்'' என்னும் ஒரு கொள்கை - தத்துவம் வந்ததே தவிர ஓர் இனம் புதிதாக வரவில்லை!

முஸ்லிம்களாயினும், தமிழராயினும் இனம் என்பது ஒன்றுதான்; அதுவே தமிழினம்!

''இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி!'' என்று பேரானந்தம் அடைபவர்கள் முஸ்லிம்கள்!

''இஸ்லாம் என்னும் போதினிலே - இன்ப
**நாதம்** வந்து பாயுது **காதினிலே** - எங்கள்
தாய் மொழி தமிழ் என்னும் போதினிலே - இன்பத்
**தேன்** வந்து பாயுது **நாவினிலே**!''

- என்று பண்ணிசைப்பதில் நான் பெருமைப்படுகின்றேன்; இவ்வாறு பல்லாயிரம் இஸ்லாமியத் தமிழறிஞர்கள் மகிழ்வெய்துகிறார்கள்; தமிழுக்கு அணி செய்கிறார்கள்; பணி புரிகிறார்கள்!!

அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தை, சந்தேகக் கண் கொண்டு யாரும் நோக்கிடல் ஆகாது! தமிழர்களெனச் சொல்லிக் கொள்வோர் - சில வேளை தமிழைத் தாழ்த்தினாலும்; உலக ஆதாயங்கள் சிலவற்றுக்காக விட்டுக் கொடுத்தாலும் முஸ்லிம்கள் ஒருபோதும் அவ்வாறு செய்ய மாட்டார்கள்; செய்யவும் முடியாது!

ஏனெனில், அரபி - பார்ஸி - உர்து - ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு அடுத்தபடியாக அல்குர்ஆனும், அண்ணலெம் பெருமானாரின் பொன்மொழிகளும் பல்லாயிரம் புனிதர்களின் வரலாறுகளும் இஸ்லாமியச் சட்டமேதைகளின் சட்டத் தொகுப்புகளும் (ஃபிக்ஹ்) மலிந்துள்ள மொழி இன்பத் தமிழே ஆகும். எனவே, இஸ்லாத்தோடு பின்னிப்பிணைந்த ஒரு மொழியாகிறது தீன் தமிழ்!

இந்நாட்டின் சிங்களப் பகுதிகளில் ஒரு விசேடம் நடைபெறுகின்றது; அங்கு வாழும் முஸ்லிம்கள் சிங்களப் பரம்பரையில் வந்தவர்கள், அவர்களுடைய வீட்டு மொழி தமிழாகவே இருக்கிறது. ஏன்?

தமிழில் இஸ்லாமிய அறிவுக் கருவூலங்கள் பொதிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடப்பதால் அதனை அறிய தமிழ் அவர்களுக்கு அவசியம். ஆதலால், தமிழிலேயே மார்க்கக் காரியங்கள் பலவற்றை நடத்துகின்றனர். அவர்கள் நன்றாகச் சிங்களம் பேசுவார்கள்; சிலர் ஆங்கிலமும் பேசுவர். ஆனால், பள்ளிவாசலுக்குள் வந்தால் தமிழில் அல்லது அரபியில்தான் பேசவேண்டும். வேற்று மொழிகள் பேசினால் வந்தது வினை. அந்தளவுக்கு பள்ளிவாசலினுள் மதிக்கப்படுகின்ற ஒரு மொழியாக தமிழ் விளங்குகின்றது என்பதனையும் இங்கு சுட்டிக் காட்டுவது நலம் எனக் கருதுகின்றேன்.

மட்டக்களப்பு மாநிலத்தைப் பொறுத்த வரை எங்கள் ஆரம்பத் தாய்மார்களான பொன்னாச்சியும், மீனாட்சியும், மலர்விழியும் வாழ்ந்திருந்த - எங்களது பூர்வீக தாயகம் இதுவேயாகும்!

எம்தாய் பொன்னாச்சி பூரித்திருந்தபூமி!
எம்தாய் மீனாட்சி வீற்றிருநததலம்!
எம்தாய் தங்கம்மா தவழ்ந்து விளையாடிய மண்!
எம்தாய் வரதலட்சுமி வாழ்ந்திருந்த நிலம்!
எம்தாய் நாடு இதுவேயாகும்!

- நிலமை அவ்வாறிருக்க, தமிழ்ப் பத்திரிகைள் முஸ்லிம்கள் மீது வேறு விதமாகச் சேறு பூச நினைத்து வகுப்பு வெறியைக் கக்கினால்; வடக்கும் - கிழக்கும் இணைந்த மாநிலத்தில் முஸ்லிம்கள் எப்படித் தமிழர்களோடு இணைந்து வாழ முடியும்?

1914ல் சேர் பொன்னம்பலம் இராமநாதன் சகோதரர்கள், முஸ்லிம்கள் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மை யுடன் நடந்துகொண்டதோடு, சிங்களப் பேரினவாதத்திற்குக் கைகொடுத்து உதவியதையும் என்னவென்பது?

தமிழரசுக் கட்சி கொடி கட்டிப் பறந்த காலத்தில், அதில் அங்கம் வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் தம் சமுகத்தின் நலன்கருதிக் கொணர்ந்த தீமானங்கள் அலட்சியம் செய்யப்பட்ட காரணத்தினாலே அவர்கள் கட்சியை விட்டு வெளியேறியதனையும் நீங்கள் எண்ணிப் பார்த்திடல் வேண்டும்!

சிங்களப் பேரினவாதிகள் தமிழர்களின் நிலங்களை அபகரித்திருக்கலாம்; அப்படித் தமிழர்களின் நிலங்கள் என்கின்றபோது, அங்கே முஸ்லிம்களின் நிலம் வேறு, இந்துக்களின் நிலம் வேறு என்று மாறுபடுத்திக் காட்ட முயலுவது விசனத்திற்குரியதாகும்.

எமது நிலத்தை - சுகத்தை - நலன்களைக் கபளீகரம் செய்யும் பேரினவாதத்தை எதிர்த்து எழுதுவது, பேசுவது, போராடுவது நியாயமானதே! அதனை விடுத்து, தமிழ்ப் பேசும் இனத்தை இருகூறுகளாக வேறுபடுத்தி - மாசுபடுத்தி - சமயவாதம் பேசுவதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் - சந்தர்ப்பவாத - அரசியல் ஆதாயம் தேட நினைக்கும் தீய சக்திகளைத் தமிழ்ப் பேசும் மக்கள் இனம்கண்டு ஒதுக்கிடல் வேண்டும்!

1798-1803 ஆகிய காலப்பகுதியில் பிரித்தானியர்தமிழர்களின் நிலங்களைப் பறித்து ஏலத்தில் விட்டபோது, அதனை முஸ்லிம்கள் வாங்கி மேல்நிலை அடைந்ததாகவும் அதன் காரணமாக, நிர்வாகப் பொறுப்புக்களில் அவர்கள் அமர்த்தப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது.

இது உண்மைக்குப் புறம்பான யூகமாகும். ஆங்கிலேயர் ஆட்சியில், அவர்களுடைய சலுகைகளைப் பெறுவதற்காகவும், ஆங்கிலக் கல்வி பெறுவதற்காகவும் உயர் பதவிகளை நாடியும், தங்கள் மதத்தையும் கலாசாரத்தையும் விட்டுக்கொடுத்து - மதம் மாறியவர்கள் யார்? நன்கு சிந்தித்துப் பாருங்கள். முஸ்லிம்களல்ல; இந்த நாட்டிலும் பிற நாடுகளிலும், ஏகாதிபத்திய - அடாவடித்தன ஆட்சியாளர்களின் ஆசை வார்த்தைளுக்கு உட்பட்டு மதம் மாறிடாத ஒரு சமுதாயம் உண்டென்றால் அது முஸ்லிம் சமுதாயம் தான் என்பது அமெரிக்க, ஐரோப்பியர்களாலேயே ஒப்புக் கொள்ளப்பட்ட பேருண்மை!

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கடும் நீர்வரிப் பழுவைத் தாங்க முடியாது, இப்பகுதித் தமிழர் பலர் தங்கள் பரம்பரைக் காணிகளை விற்றதாகவும், அவற்றினை முஸ்லிம் அதிகாரிகள் வாங்கியதாகவும் காரியப்பர் குடும்பம் போன்ற முஸ்லிம் பெருநில உடமையாளர்கள் உருவாகினர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவொரு வேடிக்கையான கூற்று.

மீனாட்சியின் மகன் மாரிமுத்து - ஒரு தேவையின் பொருட்டுத் தன் நிலத்தை விற்கிறான்; சீதா தேவியின் மகள் ஸீனத்தும்மாவினுடைய புத்திரர் சீனிமுஹம்மது அதனை வாங்குகிறான், இதிலென்னையா தப்பிருக்கிறது? மாமன் விற்க மருமகன் வாங்கியதுதானே? வேறோர் இனத்தினன் அபகரிக்கவில்லையே! அத்துடன் மாமனின் தேவையை உணர்ந்து மருமகன் செய்த உதவியாகவே இதனைக் கொள்ளல் வேண்டும்!

காரியப்பர் பரம்பரையைப் பற்றிக் கூறும்போது, ஒன்றைத் தெளிவாகப் புரிந்து கொள்ளல் இன்றியமையாததாகும்.

மறைந்த மாமேதை முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள், தம் இனத்தின் ஒருபகுதியாகிய - தமிழர் எனப்படுவோருக்குச் செய்துள்ள சேவைகள் அளப்பரியன.

அவர் சாதாரணமாக - தனிப்பட்ட தமிழ் மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமல்ல; அவர்களது வணக்கஸ்த்தலங்களுக்கும் ஏராளமான நிலம் கிடைக்க வழி சமைத்துள்ளார்.

இவர், சைவ சமயத்தைச் சேர்ந்த வன்னிமைமார் செய்யாத பேருதவிகளைத் தமிழ்க் கோவில்களுக்குச் செய்தமை, அவர்கள் எம் இனத்தினர் என்பதினாலேயாகும்.

வீரமுனை சித்தாத்துரைப் பிள்ளையார் கோயிலுக்கு, முடிக்குரிய 110 ஏக்கர் பூமி மல்வத்தைக் குளத்தை அரசிரனரிடமிருந்து பெற்றுக் கொடுத்தார். அதன் காரணமாக கிழக்கு மாகாண ஏஜென்டுத் துரையின் கடும் கோபத்திற்குள்ளானபோது, நேருக்கு நேர் வாதாடி அதன் உரிமையைக் கோவிலுக்கு எடுத்துக் கொடுத்தார்.

கல்லாற்றுப் பிள்ளையர் கோயிலுக்கு 100 ஏக்கர் வேளாண்மைப் பூமியை கிடைக்கும்படி செய்தார். அதன் விளைவாக, மட்டக்களப்பு டிஸ்திரிக் கோட்டில் எதிரியாக வழக்கு வைக்கப்பட்டார். அவ்வழக்கில் அவரே வாதாடி வெற்றிபெற்று கோயிலுக்கு அவ்வாதனத்தைச் சேர்ப்பித்தார்.

இந்த உண்மைகளை அவ்வக்கோயில் வண்ணக்கர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

நூற்றுக்கு நூறு வீதம் முஸ்லிம்கள் வாழும் கல்முனைக்குடியின் மத்தியிலே ஊடறுத்து ஓடிக் கொண்டிருக்கும் ஓர் ஓடை; அதற்கு 1950களிலே கல்முனையின் டீ.ஆர்.ஓ.வாக இருந்து - இலஞ்சமும் ஊழலுமற்று அரச பணிபுரிந்த திரு எம்.நடராசா அவர்களுடைய பெயரைச் சூடி ''நடராசா வாய்க்கால்'' என அவ்வோடைக்கு நாமமிட்டுத் தம் இன சோதரன் நடராசாவைக் கௌரவப்படுத்தினார். இன்றும் அது ''நடராசா வாய்க்கால்'' என்றே அனைவராலும் அழைக்கப்படுகின்றது. பண்டைக்கால சரித்திரப்படி, காரியப்பர் வம்சப் பிரமுகர்கள் திருக்கோயிலிலுள்ள பெயர் போன சைவக்கோயிலிலும், கதிர்காமத்திலுள்ள கோயிலிலும் வருடாவருடம் கௌரவமான சடங்குகளோடு உரிய வண்ணக்கர்களால் வரவேற்கப்பட்டார்கள். உபசார வரவேற்புச் சந்திப்பு நடந்த ஆற்றங்கரை இன்றைக்கும் இலங்கைப் படத்தில் ''காரியப்பர் ஆறு'' என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. அவை போன்று இன்னும் எத்தனையெத்தனையோ சம்பவங்கள் இப்பிரதேச மக்களின் சமயப் பொறைக்கும் ஹிந்து, முஸ்லிம் (தமிழ்ப் பேசுவோர்) வகுத்துவார் முறைக்கும் எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

இன்னும் அனேகம் உள்ளன; விரிவையஞ்சி விடுகின்றேன்.

சமய அடிப்படையில் நோக்கப் புகின் - இன்றையத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் என அழைக்கப்படுவோர், முஸ்லிம்களுக்குப் பேரினவாதிகளாக ஒருவகையில் தென்படுகின்றார்கள். அவர்களால் முஸ்லிம்கள் சொல்லமுடியாத இன்னல்களைச் சமீபத்திலே அனுபவித்துள்ளனர்; பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்; புனித யாத்திரை சென்று திரும்பிக் கொண்டிருந்த 'ஹாஜி'கள் என்று கூடப் பாராது துடிக்கத்துடிக்கக் கொல்லப்பட்டனர்.

காத்தான்குடி, ஏறாவூர் போன்ற ஊர்களில் பள்ளிவாசல்கள், கிராமங்களில் புகுந்து அழிச்சாட்டியம் புரிந்தனர். இந்தியாவின் ஹிந்துத்துவவாத - அமைதிப்படையினரின் அனுசரனையுடன் சாயந்தமருது - மாளிகைக்காடு - சம்மாந்துறைப் பகுதிகளில் தமிழ்க் காடையர்கள் அடாவடித்தனம் புரிந்தனர்; அக்கிராமங்கள் தீக்கிரையாகின; பாலகர் உட்பட பலர் கொல்லப்பட்டனர்.

அவ்வாறு எழுதுவதற்கு எவ்வளவோ உண்டு.

அவற்றையெல்லாம் மறைத்து விட்டு முஸ்லிம்கள் மீது குறைகண்டு, அவர்களை ''முஸ்லிம் காடையர்கள்'' என்று வர்ணிப்பதும் அதன் மூலம் தமிழ்ச் சகோதரர்களின் உணர்வுகளைத் தூண்ட எத்தனிப்பதும் எதனை எடுத்துக்காட்டுகிறதென்றால், நீங்களும் ஒரு பேரினவாதிகள் என்பதனைத் தானே!

அக்கட்டுரையில் ''முஸ்லிம்காடையர்கள்'' என்ற பதம் பாவிக்கப்பட்டுள்ளது. 1990களிலும், அதற்கு முன்னும் பின்னுமாகத் தமிழ் வன்செயலாளர்கள் நடந்து கொண்ட விதத்தைக் கட்டுரையாளர் மறந்ததேனோ?

மட்டக்களப்புத் தமிழகத்தின் (இரு மாவட்டங்கள்) பூர்வீக குடிகளாகிய முஸ்லிம்களையும், அவர்களது தாய்வழி உடன் பிறப்புக்களான தமிழர்களையும் பிரித்து வைத்துப் பந்தாட முனையும் கட்டுரையாளர், அத்தீய செயலுக்காகத் தமிழ்-முஸ்லிம்களிடம் மன்னிப்புக் கேட்டேயாக வேண்டும்.

அதனைச் செய்விக்க வேண்டியதும் பிரசுரித்தமைக்காக வருத்தம் தெரிவிக்க வேண்டியதும் ஆசிரியராகிய உங்கள் கடமையாகும்! இதுவே பத்திரிகா தர்மம்! நன்றி!

அன்புடன்

ஹாஜி உஸ்மான் சாஹிப்,

கல்முனை

21-11-2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் ஆண்ட தீவின் கிழக்குப் பகுதியில்

## 50 ஆண்டுகளாக தமிழர் அழிக்கப்படும் அநியாயம்

## தர்மன்

## தினக்கதிர் செய்தி

# தமிழர் ஆண்ட கிழக்குப் பகுதியில் 50 ஆண்டுகளாக தமிழர் அழிக்கப்படும் அநியாயம்

இலங்கைத் தீவின் கிழக்குப் பகுதியை தமிழர் ஆண்ட ஒரு காலம் இருந்தது. இங்கு எவ்வாறு திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றங்கள் மூலமும் ஊர்க்கொலைகள் மூலமும் தமிழ் மக்கள் கடந்த 50 ஆண்டுகளாக அழித்தொழிக்கப்பட்டு வருகின்றார்கள் என்பதைப்பற்றி உங்களிடையில் அரசியற் பிரக்ஞை உள்ள ஒருசிலரேனும் அறிவீர்கள். இதில் திருமலையில் பயங்கரமான அட்டூழியங்களே பரவலாக வெளிவந்துள்ளன. தற்போது அம்பாரை மாவட்டம் என அறியப்படும் மட்டக்களப்பின் தென்பகுதியில் எங்ஙனம் தமிழர்கள் கடந்த 10 வருடங்களாக சிங்களப் பேரினவாதிகளாலும் அரசைச் சார்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகளாலும் ஒதுக்கப்பட்டும் அழக்கப்பட்டும் வருகிறார்கள் என்பது வெளியுலகின் கண்களிலிருநற்து நன்றாக மறைக்கப்பட்டு வரும் விடயமாகும்.

வழக்கம் போல அங்குள்ள தமிழ் மக்களின் கையறு நிலைக்கு பச்சை சந்தர்ப்பவாதிகளான தமிழ் அரசியலாளரும் அலுவலர்களும் காரணமாக இருந்துள்ளனர். இருக்கின்றனர். இப்போது புலிகள் உட்பட அனைத்துத் தமிழராலும் அம்பாரை மாவட்டம் என அழைக்கப்படும் பகுதி பழைய மட்டக்களப்பு மாவட்டத்தின் சம்மாந்துறைப்பற்று, கரைவாகுப்பற்று, அக்கரைப்பற்று, பாணமைப்பற்று எனும் நிர்வாகப் பிரிவுகளால் ஆனது.

சோழராட்சிக்காலத்தில் (கி.பி. 1000 - 1200) இந்நிர்வாகப் பற்றுகள் ஏற்படுத்தப்பட்டன எனக்கொள்ள இடமுண்டு. இங்கு திருக்கோயிலிலும் உகந்தையிலும் பிரமதேயக் கிராமங்களுடன் கூடிய இரு சிவன் கோயில்களை சோழர்கள் கட்டி குடியேற்றங்களையும் செய்தனர் என மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறுகின்றது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரின் ஆட்சிகளின் கீழும் இங்குள்ள நிலங்கள் அனைத்தும் தமிழர்களின் கைகளிலேயே இருந்தன. இங்கு சில முஸ்லிம்கள் வன்னியர்களின் அனுமதியோடு நிலம் பெற்றுக்குடியேறியதாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் கூறுகின்றது.

## வன்னியர்கள் மீது கடும் வரிகள்

1798, 1803 ஆகிய ஆண்டுகளில் பிரிட்டடிஷாருக்கு எதிராக மட்டக்களப்பில் வெடித்த கிளர்ச்சிகளை ஆங்கிலப்படைகள் அடக்கியபோது காலனியரசால் தமிழர்கள் பலரின் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அத்துடன் தொடர்ந்து கிளர்ச்சியில் ஈடுபடக்கூடியவர்கள் என ஆங்கில அரசால் சந்தேகிக்கப்பட்ட பல வன்னியர்கள் மீது கடும் வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றைக் காரணமாகக் கொண்டு அநேக நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டன. இதுமட்டுமல்லாது ஏலத்தில் வன்னியர்களின் காணிகளை பெருமளவில் வாங்கி மேல்நிலை அடைந்த முஸ்லிம்கள் சிலருக்கு மேற்படி பற்றுகளின் நிர்வாகப் பதவிகளையும் ஆங்கிலேயர் வழங்கினர். இதன் பின்னர் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய கடும் நீர்வரிப்பமுவைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கமுடியாது இப்பகுதித் தமிழர் பலர் மேற்படி முஸ்லிம் அதிகாரிகளுக்கு தம் பாரம்பரிய காணிகளை விற்கலாயினர். இவ்வாறு காரியப்பர் குடும்பம் போன்ற முஸ்லிம் பெருநில உடமையாளர்கள் அங்கு உருவாகினர். (அஷ்ரப்பும் ஒரு காரியப்பர் குடும்ப வழித்தோன்றலே)

இப்படியான ஒரு சூழ்நிலையிலும் மட்டக்களப்பு நகரையண்டிய நாவற்குடா, ஆரைப்பற்றை ஆகிய ஊர்களிலிருந்தும் மானிப்பாய், சங்குவேலிப் பகுதிகளிலிருந்தும் சென்ற பல தமிழர்கள் அக்கரைப்பற்று, கரைவாகுப்பற்று, பாணமைப்பற்று ஆகியவற்றில் ஆங்கிலேயரிடமிருந்து பெருந்தென்னந்தோட்டங்களை வாங்கியும் காடுவெட்டிப் புதிய வயல் நிலங்களை உண்டாக்கியும் அங்கு வாழ்ந்தனர். 1934ல் மட்டக்களப்பு தெற்குத் தொகுதியின் பிரதிநிதியாக இலங்கை நாடாளுமன்றத்திற்குத் தெரிவாகிய தருமரெத்தினம் வன்னியனார் (நாவற்குடா), 1977ல் கூட்டணி சார்பில் பொத்துவில் தொகுதியில் தெரிவாகிய கனகரட்டினம் (யாழ்ப்பாணம்) ஆகியோர் மேற்படி குடும்பங்களைச் சேர்ந்தவர்களே. 1972ம் ஆண்டு சிறிமாவின் ஆட்சியின் கீழ் காணியுச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. (இதை நடைமுறைப்படுத்திய ஆணைக்குழுவிற்கு பொறுப்பாக இருந்தவர் சந்திரிகா) இச்சட்டத்தின் கீழ் மேற்கூறிய தமிழர்களுக்குச் சொந்தமான ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அரசால் கையேற்கப்பட்டன. இக்காணிகளும் வளமான தென்னந்தோட்டங்களும் சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டடு அவ்வப்பகுதி மக்களுக்கு அன்றைய அரசால் பகிர்ந்தளிக்கப்பட்டபோது முஸ்லிம்களே பெரும் பயன்பட்டனர். மேற்படி துண்டாடல் காரணமாக பல பெரும் தென்னந்தோட்டங்கள் இப்பகுதிகளில் இல்லாதொழிந்தன. அட்டப்பளம் (அட்டைப்பள்ளம்), பாலமுனை ஆகிய இன்றைய முஸ்லிம் குடியேற்றங்கள் இங்ஙனம் துண்டாடப்பட்ட தமிழர்களின் தென்னந்தோட்டங்களில் எழுந்தவையே.

## தமிழ் மக்களின் பொருளாதார அழிவு

தென்னைச் செய்கையில் முன்னின்ற அம்பாரை மாவட்ட தமிழர் பொருளாதாரம் இவ்வாறாக 1972ன் பின் நலிந்து சுருங்கிற்று. ஆயினும் அம்பாரை மாவட்டத்தில் தமிழரின் நிலை மிகக் கேவலங்கெடத்துவங்கியது. 1985க்குப்பின்னரே இந்த ஆண்டில் தான் பாண்டிருப்பு, கல்முனை, காரைதீவு, அக்கரைப்பற்று, பொத்துவில் ஆகிய இடங்களில் விசேட அதிரடிப்படையினரும் அவர்களுடன் கூடிய முஸ்லிம் காடையரும் தமிழருக்குப் பேரழிவை ஏற்படுத்தினர். இதில் முக்கியமாக பொத்துவில் பகுதித் தமிழர்களுடைய சமூக பொருளாதாரமே பெருமளவு அழித்து நாசமாக்கப்பட்டது. இங்கிருந்து புலிகளின் மூத்த உறுப்பினரான ரஞ்சனைத் தொடர்ந்து டேவிட், காட்டுமாடு போன்ற பல முக்கியமான போராளிகள் அவ்வியக்கத்தில் இணைந்து வந்ததைக் கருத்திற்கொண்டே பொத்துவில் விசேட அதிரடிப்படை 1985ல் தமிழழிப்பில் ஈடுபட்டது. இதற்கடுத்ததாக விசேட அதிரடிப்படையின் கவனம் திருக்கோயிலுக்கும் பொத்துவிலுக்கும் இடைப்பட்ட கரையோரப்பகுதி மீதும் அதற்கு மேற்காக சிங்களப் பகுதி வரை பரந்துகிடக்கும் கஞ்சிகுடிச்ச ஆற்றுக்காடுகள் மீதும் அவற்றை அண்டிய தங்கவேலாயுதபுரம், ஊடும்பன்குளம், தாமரைக்குளம், தாண்டியடி போன்ற சிறுவிவசாயக் கிராமங்கள் மீதும் திரும்பலாயிற்று.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1970களில் துறைநீலாவணை, நற்பிட்டிமுனை ஆகிய இடங்களிலிருந்து சென்ற காணியற்ற விவசாயிகள் பெரும்புலிக்காடுகளை வெட்டி உருவாக்கியவையே மேற்படி கிராமங்களும் அவற்றின் பயிர்நிலங்களுமாகும். 1987இன் ஆரம்பத்தில் உடும்பன்குளத்தில் புகுந்த விசேட அதிரடிப்படையினர் பட்டப்பகலில் 40 தமிழர்களைக் கொன்றொழித்தனர். மக்களைப் பயங்கரப்படுத்தி அப்பகுதியில் இருந்து வெளியேற்றும் நோக்கிலேயே இப்படுகொலை செய்யப்பட்டது.

முல்லைத்தீவு, திருமலை ஆகிய இடங்களில் இருந்து புலிகள் கடல்வழியாக வந்து திருக்கோயிலுக்கடுத்துள்ள மங்கமாரியம்மன் தோட்டப்பகுதியில் இறங்கி மரணகண்டி ஆற்றைக்கடந்து பின்னர் பொத்துவில் - திருக்கோயில் சாலையைக் குறுக்கறுத்து தாண்டியடி, தாமரைக்குளம் ஊடாக கஞ்சிகுடிச்ச ஆற்றுப்பெருங்காடுகளிலுள்ள தமது தளங்களுக்குப் போய்வருகின்றார்கள்.

## இந்தியப் படை நஞ்சப்பாவின் நடவடிக்கை

அதைத்தடுப்பதானால் தங்கவேலாயுதபுரம், உடும்பன்குளம் உள்ளிட்ட பெரும்நிலப்பகுதியிலிருந்து தமிழரை இல்லாதொழிக்க வேண்டும் என விசேட அதிரடிப்படை மட்டுமல்ல, 1988 - 1990இல் அக்கரைப்பற்றில் நிலைகொண்டிருந்த இந்தியப்படையினரும் எண்ணலாயினர். இந்த வகையில் இங்கு இந்தியப்படைக் கட்டளை அதிகாரியாய் இருந்த கேர்ணல் நஞ்சப்பாவின் கடும்நடவடிக்கைகள் கூட பெரியளவில் வெற்றியளிக்கவில்லையென்றே கூறவேண்டும்.

ஏனெனில் 1989 செப்டம்பர் மாதமளவில் இந்தியப்படை அம்பாறை மாவட்டத்தில் இருந்து படிப்படையாக வெளியேற முற்பட்டவேளையில், கஞ்சிகுடிச்ச ஆற்றுப்பகுதியில் இருந்துதான் புலிகள் பெரும் பலத்துடன் கிளம்பி வடகிழக்கில் தமது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கான அடிப்படை வெற்றிகளைப் பெற்றனர். இதைக்கருத்திற்கொண்டே 1990இன் பிற்பகுதியில் விசேட அதிரடிப்படையினர் தங்கவேலாயுதபுரத்திலிருந்து தாலிபோட்ட ஆறு வரையுள்ள தமிழர்களை அவர்களுடைய வாழ்விடங்களிலிருந்து விரட்டியடித்து அகதிகளாக்கினர். இங்கெல்லாம் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டன. திருக்கோயில், கள்ளியந்தீவு போன்ற இடங்களில் அடிப்படை வசதிகளற்ற தொழுவங்களில் அம்மக்கள் அடைக்கப்பட்டனர். கொஞ்சுதமிழும் தென்றலும் குலவிய அம்மருத நிலமக்கள் கெஞ்சி வாழும் இழிநிலைக்குத் [illegible]டனர். பத்து வருடங்கள் உருண்டோடிவிட்டன. ஆனால் அந்த அட்டூழியக்காரர்கள் [illegible]ும் தங்கள் ஊர்களில் குடியேறிட அனுமதிக்கவில்லை. ஒருகாலத்தில் [illegible]ன்று இருந்த திருக்கோவில் கிராமத்தின் சுற்றுச்சூழல் இன்று வ[illegible]னறது. வாழவழியற்ற பல அகதிகள் சிறுசிறு மரங்க[illegible]டி விறகாக்கி அவையும் அற்றுப்போக அம்மரங்களின் வேர்களைத் தோண்டியெடுத்து [illegible]ரவைத்து கொத்தி விற்று வயிறு கழுவ வேண்டியநிலை ஏற்பட்டதனாலேயே திருக்கோவில் வரண்டு போனது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாம் எங்கள் வழி!
இன்பத்தமிழ் எங்கள் மொழி!!



இஸ்லாம் என்னும் போதினிலே – இன்ப
நாதம் வந்து பாயுது காதினிலே – எங்கள்
த[illegible]ழி தமிழ் என்னும் போதினிலே – இன்பத்
[illegible] பாயுது நாவினிலே

- ஹாஜி உஸ்மான் சாஹிப் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org